## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## சிறிய திருமடல்

---

### தனியன்

### பிள்ளை திருநறையூர் அரையர் அருளிச் செய்தது

முள்ளிச் செழுமலரோர் தாரான் முளை மதியம் *
கொள்ளிக்கு என் உள்ளம் கொதியாமே * - வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க் கலியை வெட்டி *
மரு வாளன் தந்தான் மடல்

---

## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## சிறிய திருமடல்

** காரார் வரைக் கொங்கை கண்ணார் கடல் உடுக்கை *
சீரார் சுடர் சுட்டி செங்கலுழிப் பேர் ஆற்று *
பேர் ஆர மார்பின் பெரு மா மழைக் கூந்தல் *
நீர் ஆர வேலி நில மங்கை என்னும் * இப்
பாரோர் சொலப் பட்ட மூன்றன்றே * - அம்மூன்றும்
ஆராயில் தானே அறம் பொருள் இன்பம் என்று *
ஆரார் இவற்றின் இடை அதனை எய்துவார் *
சீரார் இரு கலையும் எய்துவர் * - சிக்கென மற்று
ஆரானும் உண்டென்பார் என்பது தான் அதுவும் *
ஓராமை அன்றே? உலகத்தார் சொல்லும் சொல் *
ஓராமை ஆமாறு அது உரைக்கேன் கேள் ஆமே *
காரார் புரவி ஏழ் பூண்ட தனி ஆழி *
தேரார் நிறை கதிரோன் மண்டலத்தைக் கீண்டு புக்கு *
ஆரா அமுதம் அங்கு எய்தி * - அதில் நின்றும்
வாராது ஒழிவது ஒன்றுண்டே? * அது நிற்க
ஏரார் முயல் விட்டுக் காக்கைப் பின் போவதே? *
ஏரார் இள முலையீர் என் தனக்கு உற்றது தான் *
காரார் குழல் எடுத்துக் கட்டி * - கதிர் முலையை
வாரார வீக்கி மணி மேகலை திருத்தி *
ஆரார் அயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து *
சீரார் செழும் பந்து கொண்டடியா நின்றேன் நான் *
நீரார் கமலம் போல் செங்கண் மால் என்றொருவன் *
பாரோர்கள் எல்லாம் மகிழப் பறை கறங்க *
சீரார் குடம் இரண்டேந்தி * - செழுந்தெருவே
ஆரார் எனச் சொல்லி ஆடும் அது கண்டு *
ஏரார் இள முலையார் என்னையரும் எல்லாரும் *
வாராயோ என்றார்க்குச் சென்றேன் என் வல்வினையால் *
காரார் மணி நிறமும் கை வளையும் காணேன் நான் *
ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன் * - அறிவழிந்து
தீரா உடம்பொடு பேதுறுவேன் கண்டு இரங்கி *
ஏரார் கிளிக் கிளவி எம் அனை தான் வந்து என்னை *
சீரார் செழும் புழுதிக் காப்பிட்டு * - செங்குறிஞ்சித்

தாரார் நறு மாலை சாத்தற்கு * தான் பின்னும்
நேராதன ஒன்று நேர்ந்தாள் * - அதனாலும்
தீராது என் சிந்தை நோய் தீராது என் பேதுறவு *
வாராது மாமை அது கண்டு மற்றாங்கே *
ஆரானும் மூதறியும் அம்மனைமார் சொல்லுவார் *
பாரோர் சொலப்படும் கட்டுப்படுத்திரேல் *
ஆரானும் மெய்ப்படுவன் என்றார் * - அது கேட்டுக்
காரார் குழற் கொண்டைக் கட்டுவிச்சி கட்டேறி *
சீரார் சுளகில் சில நெல் பிடித்து எறியா *
வேரா விதிர் விதிரா மெய் சிலிராக் கை மோவா *
பேர் ஆயிரம் உடையான் என்றாள் * - பேர்த்தேயும்
காரார் திருமேனி காட்டினாள் * கை அதுவும்
சீரார் வலம்புரியே என்றாள் * - திருத்துழாய்த்
தாரார் நறுமாலை கட்டுரைத்தாள் கட்டுரையா *
நீர் ஏதும் அஞ்சேன்மின் நும் மகளை நோய் செய்தான் *
ஆரானும் அல்லன் அறிந்தேன் அவனை நான் *
கூரார் வேற்கண்ணீர்! உமக்கறியக் கூறுகேனோ? *
ஆரால் இவ்வையம் அடி அளப்புண்டது தான்? *
ஆரால் இலங்கை பொடி பொடியா வீழ்ந்தது? * - மற்று
ஆராலே கன்மாரி காத்தது தான்? * - ஆழி நீர்
ஆரால் கடைந்திடப்பட்டது? * - அவன் காண்மின்
ஊர் ஆநிரை மேய்த்து உலகெல்லாம் உண்டு உமிழ்ந்தும் *
ஆராத தன்மையனாய் ஆங்கொரு நாள் ஆய்ப்பாடி *
சீரார் கலை அல்குல் சீரடிச் செந்துவர் வாய் *
வாரார் வன முலையாள் மத்தாரப் பற்றிக் கொண்டு *
ஏரார் இடை நோவ எத்தனையோர் போதுமாய் *
சீரார் தயிர் கடைந்து வெண்ணை திரண்டதனை *
வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு *
நாரார் உறி ஏற்றி நன்கமைய வைத்ததனை *
போரார் வேற்கண் மடவாள் போந்தனையும் பொய் உறக்கம் *
ஓராதவன் போல் உறங்கி அறிவுற்று *
தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கை நீட்டி *
ஆராத வெண்ணெய் விழுங்கி * - அருகிருந்த
மோரார் குடம் உருட்டி முன் கிடந்த தானத்தே *
ஓராதவன் போல் கிடந்தானைக் கண்டவளும் *
வாராத் தான் வைத்தது காணாள் * - வயிறடித்து இங்கு
ஆரார் புகுதுவார்? ஐயர் இவர் அல்லால் *
நீராம் இது செய்தீர் என்றோர் நெடுங்கயிற்றால் *
ஊரார்கள் எல்லாரும் காண உரலோடே *
தீரா வெகுளியளாய்ச் சிக்கென ஆர்த்தடிப்ப *
ஆரா வயிற்றினோடு ஆற்றாதான் * - அன்றியும்
நீரார் நெடுங்கயத்தை சென்று அலைக்க நின்று உரப்பி *
ஓராயிரம் பண வெங்கோவியல் நாகத்தை *
வாராய் எனக்கென்று மற்றதன் மத்தகத்து *
சீரார் திருவடியால் பாய்ந்தான் * - தன் சீதைக்கு
நேர் ஆவன் என்றோர் நிசாசரி தான் வந்தாளை *
கூரார்ந்த வாளால் கொடி மூக்கும் காதிரண்டும் *
ஈரா விடுத்து அவட்கு மூத்தோனை * - வெந்நரகம்
சேரா வகையே சிலை குனித்தான் * செந்துவர் வாய்

வாரார் வன முலையாள் வைதேவி காரணமா *
எரார் தடந்தோள் இராவணனை * - ஈரைந்து
சீரார் சிரம் அறுத்துச் செற்றுகந்த செங்கண் மால் *
போரார் நெடு வேலோன் பொன் பெயரோன் ஆகத்தை *
கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு * - குடல் மாலை
சீரார் திரு மார்பின் மேல் கட்டி * செங்குருதி
சோராக் கிடந்தானைக் குங்குமத் தோள் கொட்டி *
ஆரா எழுந்தான் அரி உருவாய் * - அன்றியும்
பேர் வாமன் ஆகிய காலத்து * மூவடி மண்
தாராய் எனக்கு என்று வேண்டிச் சலத்தினால் *
நீர் ஏற்று உலகெல்லாம் நின்று அளந்தான் மாவலியை *
ஆராத போரில் அசுரர்களும் தானுமாய் *
காரார் வரை நட்டு நாகம் கயிறாக *
பேராமல் தாங்கிக் கடைந்தான் * - திருத்துழாய்த்
தாரார்ந்த மார்வன் தட மால் வரை போலும் *
போர் ஆனை பொய்கை வாய் கோட்பட்டு நின்று அலறி *
நீரார் மலர்க் கமலம் கொண்டோர் நெடுங்கையால் *
நாராயணா! ஓ! மணிவண்ணா! நாகணையாய்! *
வாராய் என் ஆரிடரை நீக்காய் * - என வெகுண்டு
தீராத சீற்றத்தால் சென்று இரண்டு கூறாக *
ஈரா அதனை இடர் கடிந்தான் எம்பெருமான் *
பேர் ஆயிரம் உடையான் பேய்ப் பெண்டீர்! நும் மகளை *
தீரா நோய் செய்தான் என உரைத்தாள் * - சிக்கென மற்று
ஆரானும் அல்லாமை கேட்டு எங்கள் அம்மனையும் *
போரார் வேற்கண்ணீர்! அவன் ஆகில் பூந்துழாய் *
தாராது ஒழியுமே? தன் அடிச்சி அல்லளே? * - மற்று
ஆரானும் அல்லனே என்றொழிந்தாள் * - நான் அவனைக்
காரார் திருமேனி கண்டதுவே காரணமா *
பேராப் பிதற்றாத் திரிதருவன் * - பின்னையும்
ஈராப் புகுதலும் இவ்வுடலைத் தண் வாடை *
சோரா மறுக்கும் வகை அறியேன் * - சூழ் குழலார்
ஆரானும் ஏசுவர் என்னுமதன் பழியை *
வாராமல் காப்பதற்கு வாளா இருந்து ஒழிந்தேன் *
வாராய் மட நெஞ்சே! வந்து * - மணிவண்ணன்
சீரார் திருத்துழாய் மாலை நமக்கருளி *
தாரான் தரும் என்று இரண்டத்தில் ஒன்றதனை *
ஆரானும் ஒன்னாதார் கேளாமே சொன்னக்கால் *
ஆராயுமேலும் பணி கேட்டு அதன்றெனிலும் *
போராதொழியாதே போந்திடு நீ என்றேற்கு *
கார் ஆர் கடல்வண்ணன் பின் போன நெஞ்சமும் *
வாராதே என்னை மறந்தது தான் * - வல்வினையேன்
ஊரார் உகப்பதே ஆயினேன் * - மற்றெனக்கு இங்கு
ஆராய்வார் இல்லை அழல் வாய் மெழுகு போல் *
நீராய் உருகும் என் ஆவி * - நெடுங்கண்கள்
ஊரார் உறங்கிலும் தான் உறங்கா * - உத்தமன் தன்
பேர் ஆயினவே பிதற்றுவன் * - பின்னையும்
காரார் கடல் போலும் காமத்தர் ஆயினார் *
ஆரே பொல்லாமை அறிவார்? அது நிற்க *
ஆரானும் ஆதானும் அல்லள் அவள் காணீர் *

வாரார் வனமுலை வாசவதத்தை என்று *
ஆரானும் சொல்லப்படுவாள் * - அவளும் தன்
பேர் ஆயம் எல்லாம் ஒழியப் பெருந்தெருவே *
தாரார் தடந்தோள் தளைக் காலன் பின் போனாள் *
ஊரார் இகழ்ந்திடப்பட்டாளே? * - மற்றெனக்கு இங்கு
ஆரானும் கற்பிப்பார் நாயகரே? * - நான் அவனைக்
காரார் திருமேனி காணும் அளவும் போய் *
* சீரார் திருவேங்கடமே திருக்கோவ
லூரே * - மதிட்கச்சி ஊரகமே பேரகமே *
பேரா மறுது இறுத்தான் வெள்ளறையே வெஃகாவே *
பேர் ஆலி தண்கால் நறையூர் திருப்புலியூர் *
* ஆராமம் சூழ்ந்த அரங்கம் * - கணமங்கை
காரார் மணி நிறக் கண்ணனூர் விண்ணகரம் *
சீரார் கணபுரம் சேறை திருவழுந்தூர் *
காரார் குடந்தை கடிகை கடல் மல்லை *
ஏரார் பொழில் சூழ் இடவெந்தை நீர்மலை *
சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர் *
பாரோர் புகழும் வதரி வட மதுரை *
ஊராய எல்லாம் ஒழியாமே நான் அவனை *
ஓர் ஆனை கொம்பொசித்து ஓர் ஆனை கோள் விடுத்த
சீரானை * - செங்கண் நெடியானைத் தேன் துழாய்த்
தாரானை * - தாமரை போல் கண்ணானை * எண்ணரும் சீர்
பேர் ஆயிரமும் பிதற்றி * - * பெருந்தெருவே
ஊரார் இகழிலும் ஊராது ஒழியேன் நான் *
வாரார் பூம் பெண்ணை மடல்

ஊராது ஒழியேன் உலகறிய ஒண்ணுதலீர்! *
சீரார் முலைத் தடங்கள் சேரளவும் * - பார் எல்லாம்
அன்றோங்கி நின்றளந்தான் நின்ற திருநறையூர் *
மன்றோங்க ஊர்வன் மடல்

**அடிவரவு:** காரார் மன்னிய

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---